## பொள்ளாச்சி நகராட்சி

## 04.09.2019 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட தீர்மானம்

1770) பொள்ளாச்சி நகராட்சியில் 2019–20ம் நிதியாண்டில் நகர்புற சாலை உட்கட்டமைப்புத்திட்டத்தில் (TURIP) கீழ்க்கண்ட சாலைகளில் தார்த்தளப் பணிகள் அமைக்க ரூ.10.00 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | வார்டு எண். | சாலையின் நீளம் கி.மீ | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | வீரமாமுனிவர் வீதி, டைமண்டு சிட்டி, பொன் நகர், அன்பு நகர், எம்.ஜி.எம் நகர், மதுரவீரன் கோவில் வீதி முதல் நகராட்சி எல்லை வரை, வடுகபாளையம் ரோடு, ஆண்டாள் அபிராமி நகர் மற்றும் ஜெயலட்சுமி நகரில் ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 01,02,03, 23 | 5,07 | 370.00 |
| 2. | தங்கமுத்து காலனி, பாரதி நகர், பாலகிருஷ்ணன் லே அவுட், நிவேதா நகர், அழகாபுரி வீதி, திருநீலக்கண்டர் வீதி, வாசுவி நகர், மருதமலை ஆண்டவர் நகர் மற்றும் விப்ஜியார் வேலி ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 03,21,22 23,26 | 3.81 | 230.00 |
| 3. | கதிரவன் நகர், ராஜேஸ்வரி நகர், கோபாலகிருஷ்ண அவென்யூ, ருக்குமணி அம்மாள் பள்ளி ரோடு, நல்லி கவுண்டர் வீதி, உடுமலை ரோடு நாராயணன் காலனி, முத்து கவுண்டர் லே அவுட், காமாட்சி நகர் மற்றும் ஊத்துக்காடு ரோடு ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 09,34,35 | 3.20 | 200.00 |
| 4. | பாலாஜி நகர், ராஜராஜேஸ்வரி நகர், கோட்டாம்பட்டிகுறுக்கு வீதி, தண்டுமாரியம்மன் கோவில் வீதி, கோட்டாம்பட்டி பள்ளி முதல் சேக்கிலார் வீதி, டெனமென்டல் பிளாக், ராஜிவ் நகர், பாரதி வீதி மற்றும் ஏ.எஸ்.டி புரம் ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 05,07,09 | 3.00 | 200.00 |
| | | | 15.08 | 1000.00 |

மேற்காணும் சாலைகள் பாதாள சாக்கடைத் திட்டப் பணி காரணமாக, சேதமடைந்து போக்குவரத்திற்கு பெரிதும் இடையூராக உள்ளது. இதனால் சாலைகளை தார் சாலையாக அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி உதவி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருவிற்கேற்ப நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் ந.க.எண்.17349/2019/இ3 , 03.09.2019–ம் நாளிட்ட கடிதத்தில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கு மன்ற தீர்மானம் நிறைவேற்றி சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிதி விபரம்:–**

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | ரூ.3.00கோடி |
| 2 | மாநில நிதிக்குழு/ மத்திய நிதிக்குழு மானிய நிதி /நில அபிவிருத்திக்கட்டணம் | ரூ.3.50 கோடி |
| 3 | நகராட்சி பங்குத் தொகை | ரூ.3.50 கோடி |
| | மொத்தம் | ரூ.10.00 கோடி |

நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற கடிதம் மன்றத்திற்கும், பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் வரப்பெற்ற கடிதத்தில் குறிப்பிட்ட நகராட்சி பங்குத் தொகை ரூ.3.50 கோடியை பொது நிதியில் செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.4915/2017/இ1**